விற்பனைக்கல்ல... தனிச்சுற்றுக்கு மட்டும்

புதிய ஆரம்பம்

2025 December 1-30

இன்று

ஈ இதழ்

அடுத்த இதழ்

2026

பத்தாண்டு

சிறப்பிதழ்



அடுத்த இதழ் சிறப்பாசிரியர்

வேலூர் முத்து ஆனந்த்

அனைவருக்கும் வணக்கம்.

அடுத்த இதழ் புத்தாண்டு பொங்கல் இன்றுவின் இரண்டாம் ஆண்டு துவக்க இதழ் என பல்வேறு சிறப்புக்களைக் கொண்டது.

இதன் ஒரு பகுதியாக மாதம் ஒரு சிறப்பாசிரியர் வரிசையில் முதல் இதழ் வேலூர் முத்து ஆனந்த் அவர்களின் தயாரிக்கும் சிறப்பிதழாக வெளியாகிறது.

வேலூர் முத்து ஆனந்த்-ன் யாரும் பார்க்காத மற்றொரு பக்ககமாக இதழ் தயாராகிறது. அவரின் சிறுவயது வாழ்க்கை, பள்ளிப்படிப்பு, கல்லூரி காலம், எழுத்துலகம், நண்பர்கள் விபரம், தான் பார்க்கும் உலகம், மாற வேண்டியவை என்று தன் மனதில் தோன்றுவதை எழுத்துக்களாக்கி உங்களை மயக்க வருகிறார்.

அதே போல் அடுத்தடுத்த இதழ்களுக்கு ஒருவர் சிறப்பாசிரியராக பணியாற்றலாம்.
விருப்பமுள்ளவர்கள் இப்போதே விபரங்களை சேகரிக்க துவங்குங்கள்.

புதிய ஆண்டில் வாழ்வை எளிதாக்க, மெருகேற்ற என்ன செய்யலாம் என்று சிந்தியுங்கள்.

சிந்தித்தால் மட்டும் போதாது... செயலாற்றவும் செய்யுங்கள்.

சென்ற இதழ் மிகவும் எளிமையாக இருந்தாக பெரும்பாலோனோர் தெரிவித்தனர். எளிமையும் ஒரு அழகு தான்... இனி எளிமையை சற்று குறைத்து எப்போதும் போல் இதழ் வெளியாக முயற்சி செய்கிறோம்.

அனைவருக்கும் நன்றி...

வெ.கோபிநாத், ஆசிரியர்.

செல்:7094053241
www.indhru.in
indhrumail@gmail.com

புதுக் கவிதை 3



முத்து ஆனந்த் வேலூர் 7010482479



காதல் என்பது....
ஜில்லென்று தொடங்கி சூடாக முடிவது!

காதல் என்பது....
ரசிக்க ஆரம்பித்து ருசித்து சுவைப்பது!

காதல் என்பது....
அதரங்களுக்கு நிறைய வேலை வாய்ப்பளிப்பது!

காதல் என்பது....
வழிய வழிய உருகுவது!

காதல் என்பது....
ஜவ்வு மிட்டாய்ப் பணியைக் கைப்பற்றிச் செயலாற்றுவது!

காதல் என்பது....
முத்தத்தில் மன்னிப்புக் கேட்டு மொத்தத்தில் சமாதானமாவது!

காதல் என்பது....
சமாதான பின்பும் சண்டையைத் தொடர்வது!

காதல் என்பது....
அதுக்காகவும் இதுக்காகவும் எதுக்காகவும் தயாராக இருப்பது!

ஊடுறுவல்

கைகளுக்குள்ளும்
கண்களுகளுக்குள்ளும்
புகுந்து விட்டது

பழக்கம்

காணொளி வந்த பின்
காணாமல் போயிற்று
படிக்கும் பழக்கம்!

வேடிக்கை

விபத்தையும்
வேடிக்கை பார்க்கும் தருணம்
மொபைல் காலம்!

நிஜம்

வருவதும் தெரிவதில்லை
போவதும் தெரிவதில்லை
இன்றைய திரைப்படங்கள்!



லி.நௌஷாத் கான் ✆ 971561093550

இதயமில்லாதவளிடம்
காதலின் ஈரம் இருக்காது
எத்தனை கதவுகளை தட்டினாலும்
ஒரு போதும்
அவள் இதயக் கதவு
திறக்கப் போவதில்லை
காசுக்கு மலம் தின்னும்-சில
மனிதர்களிடம்
காதலை எதிர்பார்ப்பது
யார் குற்றம்?
ஆறறிவை விட
அன்பால் ஐந்தறிவு
உயர்ந்தது!

மழை ஓய்ந்த பிறகும்
மரக்கிளைகளில் இருந்து
பெய்யும் மழை
நீ கைவிட்ட பிறகும் -உன்
நினைவில்
நனைந்து கொண்டிருக்கும்
என் பெருங்காதல்!


கர்வம் பிடித்து திரிகிறது
அந்த மழை
உன் மேல் பட்டதால்!

எது எழுதினாலும்
பிள்ளையார் சுழி போல
அவள் பெயர் எழுதியே
தொடங்குகிறேன்!
எனக்கு என்னை விட
எல்லாமும் அவள்
என்பதை
அவளிடம் எப்படி
சொல்வது?

காதல் மதம் பிடித்து திரிந்தது
அந்த கும்கி யானை
உன் ஜிமிக்கி காட்டில்



ஒலிக்கும் அவள் குரல்
தான்
எனை எழுப்பும்
அலாரம்
அவள் இதுவரை
என்னிடம் பேசியதே
இல்லை
பாடி தான்
கொண்டிருக்கிறாள்!



புதுப்புனை

கோவை கவி புவனா

பேராற்றல்!

வாழ்வில் முன்னேற
உடல் வலுப்பெற...
மந்திரம் வசப்பட
மனமது மேம்பட...
ஐம்புலன்களும் கட்டுப்பட
யோக நிலையடைய...
அற்புதப் பேராற்றல்
வேண்டுமே இறைவா!

மகாகவி பாரதியார்




அச்சமில்லை
அச்சமில்லை!
எனக்கு
உனது பெயரை
உச்சரிக்கும் போதெல்லாம்...

காக்கை குருவியுடன்
உனது பாடலா!?
மீசை முழுவதும்
கண்ணம்மாவின்
காதலா!?

உன் பேச்சாலே
இப்பாரதம் கண்டதே
மாபெரும் யுகப்புரட்சி!

புதுமைப் பெண்களுக்கான
சுதந்திர மறுமலர்ச்சி!!!



இணையவழி மோசடிக்கு
பலியாகாதீர்கள்
அழையுங்கள்
1930
புகார்களை பதிவு செய்ய
www.cybercrime.gov.in

இன்று ஈ இதழ்
வாசிப்பை
நேசிப்போம்



கவிஞர் இல.ரவி செ.புதூர் 9952113194

பாரதி...



அவன் பாட்டுக்கு
உண்டு கொழுத்து உறங்கிக்
கொண்டிருந்த வேளையில்
இவன் பாட்டுக்கு..
இமயத்தையேச் சரியச் செய்தவன்....!

சாத்திரமும் தோத்திரமும் படித்த இவன்.. தரித்திர வாழ்க்கையில் சரித்திரம் படைத்தவன்...!


சுதந்திரம் அடையும் முன்னே- ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்'-என மூர்க்கமாய்ச் சொன்ன தீர்க்கத்தரிசி அவன்...!

வேல் எடுத்து போராடிய காலத்தில் ஒரு
எழுதுகோல் எடுத்து விடுதலைக்குப் போராடியவன்...!


சுதந்திரக்காற்றை யார் யாரோ இன்று சுவாசிக்க- இவன் மட்டும் பார் தீயாய்ப் பரவி....பாரதியாய் பவனி வருகிறான்...!!

"மீன் சாப்பிட்டதாலா உன் பல் உடைஞ்சது... நம்புற மாதிரி இல்லையே!"

"நான் சாப்பிட்டது பாறை மீன் ஆச்சே!"



சு.அருண் பிரகாஷ்
இராமச்சந்திரபுரம் Ph: 8526037792







மலர்மதி வேலூர் 8667417874

பாலில் தண்ணீர் கலந்து விற்று நல்ல லாபம் பார்த்தான் தனபாலன்.

வாசலில் மாலையும் கழுத்துமாக வந்து நின்றாள் அவனுடைய ஒரே மகள் வனிதா, வேற்று ஜாதிப் பையனுடன் கலப்புத் திருமணம் செய்துகொண்டு!

கவிதை



கே.அசோகன் சென்னை 90478 96065

தேநீர் கோப்பை
சுத்தம் செய்த பின்னும்
ஒட்டிக் கிடக்கிறது
இனிப்பு
அவளின் இதழ்கள்
பதிந்ததால்

அவளின்
காது ஜிமிக்கைகள்
அசைந்து இசைத்தன
அவள் பாடிய
மோகன ராகத்திற்கு
இசைக் கச்சேரியில்

மனதில் சுமக்கிறேன்

நீ
தூக்கியெறிந்த
காதலைதான்
நான்
தூக்கி சுமக்கிறேன்
குழந்தையைப் போல
காதலை மட்டுமல்ல
உன்னையும் தான்
உன்னை போல்
நானும்
தூக்கியெறிந்திருந்தால்
நம் காதல்
அனாதையாகியிருக்குமே
அதனாலதான்
காதலை
கண்ணில் வைத்து
உன்னை
நெஞ்சில் வைத்து
காதலுக்கு துணையோடும்
உன் நினைவோடும்
வாழ்ந்து வருகிறேன்



பாரதி முத்து
ஓட்டேரி
வேலூர்

செல்:7094053241
www.indhru.in
indhrumail@gmail.com

சிரிப்பு 8



ஏ.மூர்த்தி புல்லரம்பாக்கம் ✆9600886441

1. சட்டசபையில் லேசா கண் அயர்ந்தது தப்பாப் போச்சி
ஏன் தலைவரே?
என்னப் பாத்தாலே எதிர் கட்சிக்காங்க தூங்காதே தம்பி
தூங்காதே பாடறாங்களேய்யா

2. எனக்கு சமைக்கத் தெரியாதுடி
ஒரு ஆம்பளையா இருந்துக்கிட்டு சமைக்கத் தெரியாதுன்னு
சொல்றீங்களே உங்களுக்கு வெக்கமா இல்ல?

3. கிணறு வெட்ட பூதம் கிளம்பிடிச்சிடா...
எங்க வீட்லயும் போர் போடனும் பூதத்த கொஞ்சம்
வரச்சொல்லுடா...

4. டாக்டர் எதுக்கு ஆனந்தக் கண்ணீர் வடிக்கறீங்க?
நான் ஆபரேஷன் பன்ன ஒரு பேஷன்ட் கண்ண
திறந்துட்டாராம்


5. எனக்கு வேலையேக் கிடைக்கல...
எதுவரைக்கும் சார்?
எனக்கு ரிட்டயர்டு வயச கடக்கற வரைக்கும்.





மந்திரங்கள்
தந்திரங்கள்
மாற்றி
யோசி
இன்று ஈ இதழ்
7094053241
www.indhru.in


மந்திரங்கள்
தந்திரங்கள்
கடனை
குறை
வாழ்க்கை
புதிர் தான்
ஏதோ 1
கற்று வா
சுற்றம் பேண்
உடலை
ஆராதி
மனதை
லேசாக்கு
கணக்கு
பார்க்காதே


மந்திரங்கள்
தந்திரங்கள்
முதல்
செலவு
சேமிப்பு
நோயை
கவனி
கடன்
வாங்க
யோசி


காலம் தவறிய நன்றி, மன்னிப்பு, உதவி, சொல், செயல் அனைத்துமே பயனற்றதாகும். செய்ய நினைத்ததை காலத்தில் உடனே செய்யவேண்டும்.


"மனிதன்"
சுயமாகச் சிந்திப்பது
தான் அடிப்படைக்
"கற்றல்முறை"
ஆகும்.!


அன்பு கருணையில்
இருந்து பிறப்பது;
ஆனால் ,மோகம்
அகங்காரத்தில்
இருந்து பிறக்கிறது.
அன்பு பொதுநலம்
பயக்கவல்லது,;
ஆனால் மோகம்
சுயநலம்
அளித்து விடும்.

செல்:7094053241
www.indhru.in
indhrumail@gmail.com

ஜோக்ஸ் 10



நடேஷ் கன்னா
கல்லிடைக்குறிச்சி ✆ 99442 84135

1. நம்ம தலைவர் வெளிப்படையாக அறிக்கை விட்டிருக்கிறார்

அப்படி என்னா சொல்லிருக்காறு?

ஊழலில் பங்கு தருகிறோம் ஆனால் ஆட்சியில் பங்கு தர முடியாது என்று அறிக்கை விட்டு இருக்கிறார்

2. தலைவரே இனிமேல் நெஞ்சில் குடியிருக்கும் மக்களே என்று பேசாதீர்கள்.....

ஏன்

எல்லோரும் உங்கள் நெஞ்சை பிளந்து காட்ட சொல்கிறார்கள்...

3. தங்கம் விலை பவுனுக்கு 90 ஆயிரம் வந்துவிட்டது

ஏன் 40 ஆயிரம் விற்கும்போது என்ன செஞ்சீங்க?


40,000 ஆகிவிட்டதே என்று கவலைப்பட்டேன்

4. என்னங்க இந்த கலரில் வேறு டிசைன் இருக்கா

அடியே நாம வந்திருப்பது காய்கறி கடை கொஞ்சம் அடக்கி வாசி....

5. எங்கள் தெருவுக்கு ஆம்புலன்ஸ் வரச் சொல்லி போன் போட்டோம் இன்னும் வரலை

எதுக்கும் தலைவர் வாராரு அப்படின்னு மறுபடியும் போன் போடுங்க





பி.ஆர்.கிரிஜா சென்னை

கேளிக்கை




கழைக் கூத்தாடி
கம்பியின் நுனியில்
குதூகலத்தில்
குழந்தைகளின் கரவொலி;
முதியோர்களின் பொக்கை
வாய் புன்னகை;
சிறியவர், பெரியவர்
அனைவரும் ரசிப்பது
கூத்தும், கேளிக்கையுமும் ;
கூத்தாடிக்கோ
உயிர்ப் பணயம்;
தினம் தினம் கூத்து
அவனது அன்றாட வாழ்க்கையில் வாடிக்கை ;
கேளிக்கை அவன் வாழ்வில் என்றும் கேள்விக்குறி !



நாஞ்சில் சு.நாகராஜன்
பறக்கை, கன்னியாகுமரி ✆-9486387026

அன்பான வேண்டுகோள்

வாயுபகவானே... வாயுபகவானே...
வங்கக்கடலில் மையம் கொள்ளாதே
வருணபகவானே... வருணபகவானே....
சென்னை நகரில் களி நடனம் புரியாதே





கல் தோன்றி மண் தோன்றா
காலத்துக்கு
முன் தோன்றிய மூத்த குடி மீது
இரக்கம் கொள்

உன் தீராத விளையாட்டை
மலையிலும் மேட்டிலும் வைத்துக்கொள்

வேளச்சேரியிலும் கொளத்தூரிலும்
கோபாலபுரத்திலும் கொட்டி தீர்க்காதே

புழலேரி, செம்பரம்பாக்கம் பக்கம் போய்விடு
வாயு வருண பகவானிடம் இதுவே சென்னைவாசி
வைக்கும் அன்பாக வேண்டுகோள்.





பசியுடன் இருப்பவர்களுக்கு உணவு வழங்குவோம்.. பசி இல்லாத சமுதாயத்தை உருவாக்குவோம் என்று டைம்லைனில் தெரிவித்து அதன்படியே ஒரு 10 ரூபாய் சாப்பாட்டுக்கடை என்ற ஒரு நிறுவனம் சேலத்தில் இயங்கிவருகிறது. யு ட்யூபில் இது தொடர்பான வீடியோக்கள் உள்ளன.

எவ்வளவு உயர்ந்த உள்ளத்தோடு இப்பணியைச் செய்து வருகிறார்கள். பசியுடன் வரும் உழைப்பாளிகள் அந்த உணவை சாப்பிடும்போதே அவர்கள் முகத்தில் மகிழ்ச்சி தெரிகிறது. அதிலும் சிலரிடம் அவர்கள் பணம் எதுவும் வாங்காமல் உணவுக்கான டோக்கன் வழங்குகிறார்கள்.

அந்நிறுவனத்திற்கு இன்று-வின் சார்பில் வாழ்த்துக்கள்.







இது நமது இன்று–வின் வெப் சைட்.

இதில் இன்று ஈ இதழ் பகுதியில் முன்னர் வெளியான இதழ்கள் உள்ளன....

தகவல்கள் பகுதியில் பல்வேறு தகவல்கள் தொடர்ந்து பதிவேற்றமும் அப்டேட்டுகளும் செய்து வருகிறோம்...

இன்று ஈ ஸ்டோரில் விற்பனை செய்யப்படும் பொருட்கள் விபரம் உள்ளது. இவைகள் அனைத்துமே மேம்படுத்தப்பட்டு வருகின்றன..

வாசகர்கள் தங்கள் ஒத்துழைப்பை தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இந்திய மாநிலங்களின் போக்குவரத்து பதிவு எண்கள்

AP	ஆந்திரப் பிரதேசம்	OD	ஒடிசா
AR	அருணாச்சல்பிரதேசம்	PB	பஞ்சாப்
AS	அசாம்	AJ	ராஜஸ்தான்
BR	பீகார்	SK	சிக்கிம்
CG	சத்தீஸ்கர்	TN	தமிழ்நாடு
GA	கோவா	TG	தெலுங்கானா
GJ	குஜராத்	TR	திரிபுரா
HR	ஹரியானா	UP	உத்தரப்பிரதேசம்
HP	இமாச்சலபிரதேசம்	UK	உத்தரகாண்ட்
	இன்று ஈ இதழ் 7094053241 indhrumail@gmail.com		
JH	ஜார்கண்ட்	WB	மேற்கு வங்காளம்
KA	கர்நாடகா	AN	அந்தமான் நிக்கோபர்
KL	கேரளா	CH	சண்டிகர்
MP	மத்திய பிரதேசம்	DL	டெல்லி
MH	மகாராஷ்ட்ரா	JK	ஜம்மு காஷ்மீர்
MN	மணிப்பூர்	LA	லடாக்
ML	மேகாலயா	LD	லட்சத்தீவுகள்
MZ	மிசோராம்	PY	புதுச்சேரி
NL	நாகாலாந்து	DD	தாத்ரா நகர் ஹவேலி மற்றும் டாமன் டையூ.



மீண்டும் மீண்டும் காதல் செய்வோம் வா...

சசிகலா திருமால் கீழப்பழுவூர்

நீயும் கொஞ்சம்
காதல் கொண்டு வா
நானும் கொஞ்சம்
காதல் கொண்டு வருகிறேன்
காதலோடு காதல்
கைகோர்த்துக் கொண்டு
பெருங்காதல் செய்யட்டும்...



காதலின் மடியினில் துயில்வோம்
முத்தம் உண்டு பசியாருவோம்...
உன்னோடு கசியும் காதலை
என்னுள் ஊற்றி சிறையிடு
என்னோடு கசியும் காதலை
உன்னுள் ஊற்றி சிறையிடுகிறேன்..
காதல் கைதிகளாய்
காலங்களைக் கழிப்போம்...

நம் பெருங்காதலின் ஆட்சியில்
நீயும் நானும் அடிமைகளாவோம்
காதலுக்கு சேவகம் செய்வோம்
எல்லையில்லா காதலின்
நினைவுச் சின்னமாக
கவி சிசுக்களை பிரசவிப்போம்...

நம் காதல் மீது
பொறாமைக் கொண்டு
மரணதேவன் தூதுவிட்டால்
மரணக்குழியிலும்
மரணமில்லா காதல் செய்வோம்
மானிட உடல் மாண்டாலும்
மரணமில்லா நம் காதல்
மீண்டெழட்டும்...
அப்போதும் காதல் செய்வோம் வா...
ஆம்... மீண்டும் மீண்டும்
காதல் செய்வோம் வா...





ஸ்ரீநிவாஸ் பிரபு 93400 51321

மதிப்பின் மதிப்பெண்

சரியாக மதிக்கப்படுவோமா
என்னும் பதற்றமும்,
சரிவர மதிக்கப்படமாட்டோமோ
என்னும் குழப்பமும்,
சரியாக மதிக்கப்படவில்லை
என்னும் சீற்றமும்
எல்லா நேரங்களிலும்
மதிப்பிற்கான மதிப்பெண்ணை
மாறிக் கொண்டே இருக்கிறது.

பாரதிராஜன்என்கிற ரங்கராஜன் எஸ். வி.
சென்னை அம்பத்தூரிலிருந்து.

வேலைத்தேடி வந்தவனிடம்
வேலை காலி இல்லை போர்டை
எழுதச்சொன்ன முதலாளி !

மகனுக்கு புது செருப்பு
வாங்கினான் தன்
பழைய செருப்பை
மறுபடியும் தைத்த தந்தை!

அம்மாகேட்ட பணத்துக்காக
தன்குருதியை தானம் செய்த
பணத்தை அம்மாவிடம் தந்த மகன்!




இன்று-வின்
பழைய இதழ்கள்
படிக்க வேண்டுமா?

www.indhru.in

பார்வையிடுங்கள்

கண்ணாடிப் பக்கம்







வீட்டிற்கு மூத்த அண்ணன்
பொறுப்புடன் நடந்தான்
காதலிக்க நேரமில்லை

நம்.திரு.ரஅம்ஏச

கதைகளில் வரும் பெயர்கள் சம்பவங்கள் அனைத்தும்
கற்பனையே... யாரையும் எதையும் குறிப்பிடுவன அல்ல...
அழகிய ஆரம்பம் இன்று ஈ இதழ் வெளியிடுபவர்
ஆசிரியர் திரு.வெ.கோபிநாத் இன்று ஈ இதழ் -
29 சக்தி நகர், ஆதம்பாக்கம், சென்னை செல் 7094053241



இன்று இதழை படித்ததற்கு நன்றி